அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் :120/2017

தேதி : 23/10/2017

**கந்துவட்டி கொடுமையால் தீக்குளித்ததில் தாய், மகள் உயிரிழப்பு**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத்தலைவர் ஆர்.சரத்குமார் உருக்கம்.**

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், கந்து வட்டி கொடுமையால் 2 குழந்தைகள் உள்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் தீக்குளித்ததில் தாயும் மகளும் உயிரிழந்த சம்பவம் நெஞ்சை உருக்குவதாக உள்ளது.

கந்து வட்டி கொடுமையால் தற்கொலை சம்பவங்கள் அதிகரித்ததின் காரணமாக தமிழக அரசு ”தமிழ்நாடு அதீத வட்டிவசூல் தடைச் சட்டத்தை” 2003 ஆம் ஆண்டு கொண்டுவந்தது. வருடத்திற்கு 18 சதவீதத்திற்கு மேல் கந்துவட்டி வசூலிப்பவர்கள் மீது தடை விதிக்க இச்சட்டத்திற்கு அதிகாரம் உள்ளது. மேலும் "மீட்டர் வட்டி" மற்றும் "தண்டல்" என்ற வகையில் வட்டி வசூலிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் இச்சட்டத்திற்கு முழு அதிகாரம் உள்ளது.

இச்சட்டம் நடைமுறையில் இருப்பினும் இன்று காலையில் அதிர்ச்சியளிக்கும் சம்பவமாக நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்பு காசிதர்மத்தை சேர்ந்த இசக்கிமுத்து, சுப்புலட்சுமி ஆகியோர் அவர்களது 2 குழந்தைகளுடன் தீக்குளித்தனர். அவர்கள் 4 பேரும் உயிருக்கு போராடி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது சிகிச்சை பலனின்றி தாய் சுப்புலட்சுமியும் அவரது மகள் மதிசாருண்யாவும் உயிரிழந்த செய்தி மிகுந்த வேதனை அளிக்கிறது.

வாங்கிய கடனுக்கு மேல் அதிகமாக பணம் கேட்டு மிரட்டியுள்ளதாக தெரிகிறது. கடன் கொடுத்தவர்கள், கடனை திரும்ப வசூலிக்க ஆட்களை கொண்டு அப்பாவிகள் மீது நடத்தப்படும் கீழ் தர நடவடிக்கையால் இத்தகைய சம்பவங்கள் நிகழ்வது மனிதநேயமற்ற செயலாகவே கருதுகிறேன்.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

கடன் வாங்குபவர்களின் தேவை, அதிலும் அதிகமான வட்டியில் கடன் வாங்கப்படுவதற்கான அவசியம் என்ன என்பதை ஆராயவேண்டியது அரசாங்கத்தின், சமூகத்தின் மீது அக்கறையுள்ள ஒவ்வொருவரின் கடமையும் ஆகும். எனவே அரசாங்கம் இதனை கண்காணித்து இதுபோன்ற விபரீத சம்பவம் இனி நடைபெறாமல் இருக்க "தமிழ்நாடு அதீத வட்டிவசூல் தடைச் சட்டத்தின்" கீழ் தீவிரமாக கடுமையான தண்டனைக்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். மேலும் காயமடைந்த 2 பேரும் விரைவில் குணமடைய இறைவனை பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

**ஆர்.சரத்குமார்**

நிறுவனத்தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017

No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.

தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com